**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 48** **நாள்: 23.02.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர்களுக்கான 2019–2020 ஆண்டு உயிர் சான்றிதழ் சரிபார்க்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்படும் என ஆணையாளர் திரு.ஜி.பிரகாஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களிடமிருந்து 2019–2020ம் ஆண்டிற்கான உயிர் சான்றுகள் மார்ச் மாதம் முதல் தேதி முதல் ஜூன் மாதம் 30ம் தேதி வரை அலுவலக வேலை நாட்களில் காலை 10.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டவாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஓய்வூதியப்பிரிவில் பெற்றுக் கொள்ளப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| வ.எண் | விவரம் | உயிர் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டிய மாதம் |
|---|---|---|
| 1. | 31.12.1979 வரை ஓய்வு பெற்ற ஓய்வூதியர்கள் (ம) குடும்ப ஓய்வூதியம் | மார்ச் 2019 |
| 2. | 01.01.1980 முதல் 31.12.1989 வரை ஓய்வுபெற்ற ஓய்வூதியர்கள் (ம) குடும்ப ஓய்வூதியர்கள் | ஏப்ரல் 2019 |
| 3. | 01.01.1990 முதல் 31.12.1999 வரை ஓய்வுபெற்ற ஓய்வூதியர்கள் (ம) குடும்ப ஓய்வூதியர்கள் | மே 2019 |
| 4. | 01.01.2000 முதல் பிப்ரவரி 2019 வரை ஓய்வுபெற்ற ஓய்வூதியர்கள் (ம) குடும்ப ஓய்வூதியர்கள் | ஜூன் 2019 |

புதிய மருத்துவக் காப்பீட்டு திட்டம்–2018 படிவத்தை இதுநாள் வரை அளிக்காதவர்கள் உயிர் சான்று சமர்ப்பிக்க வரும்போது ஓய்வூதியர்கள், கணவர் / மனைவியுடனான புகைப்படம் (Joint Photo) குடும்ப ஓய்வூதியர், தங்களது புகைப்படம் 2 எண்ணிக்கையும், இருவரது ஆதார் அட்டை நகல்களுடன் வருமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜி.பிரகாஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**